## வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி - 2017

---

வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றல் கூற்று, காசுபாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைதிறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மீளாய்வாண்டின்போது தாய்க்கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த கணனியின் பெறுமதி ரூபா 71,800 தொடர்பில் எவ்வித காசு வெளிப்பாய்ச்சலும் ஏற்பட்டிராத போதிலும் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சலாக இனங்காணப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது எவ்வித விற்பனை வருமானமும் உழைத்திராத போதிலும், வாடகை கட்டணங்கள் மற்றும் சில்லறைச் செலவுகளின் திரண்ட தொகை ரூபா 22,360 விற்பனைக்கிரயமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) எவ்வித வசூலிப்பு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார கடன்பட்டோரின் தொகை ரூபா 15,229,562 தொடர்பில் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒரு முழு ஏற்பாடு மேற்க்கொள்ளப்பட்டிருந்தது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனியினது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான தோற்றத்தினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாட்டு அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவில் வேண்டப்பட்டதன் பிரகாரம், நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்:

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் கணக்காய்விற்கான நோக்கெல்லையும் வரையறைகளும் மேலே குறிப்பிட்டுள்ளவாறாகும்.

ஆ. - கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்பதுடன் இது வரையான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுகின்றவாறு, கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்பட்டன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாட்டுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்கியிருந்தன என்பதும்,

எனது அபிப்பிராயமாகும்.

## 2.1.2 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

தொடர்ச்சியான வணிக நட்டம் எதிர்க்கணிய தொழிற்படு மூலதனம் மற்றும் எதிர்க்கணிய திரவத்தன்மை எல்லை என்பன காரணமாக கம்பனியின் பணிப்பாளர் சபை 2018 பெப்ரவரி 15 இல் கம்பனியை கலைப்பதற்கான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஆகையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரித்தளித்தலில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு எடுகோள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைவாக, 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்குமுன் தேறிய நட்டம் ரூபா 6,435,373 ஆனது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்குமுன் தேறிய நட்டம் ரூபா 6,693,385 உடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதி பெறுபேறுகளில் ரூபா 258,012 ஆன சிறிய முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. கம்பனியின் விநியோகச் செலவுகள் குறைவடைந்தமை மீளாய்வாண்டில் நிதிப் பெறுபேறுகளின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 3.2 பெறுமதி சேர்மானம்

கம்பனியின் நிதிப்பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில், 2014 ஆம் ஆண்டிற்கான பெறுமதி சேர்ப்பானது ரூபா 1,897,969 ஆக காணப்பட்டதுடன் அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக எதிர்க்கணியப் பெறுமதியைக் கொண்டுள்ளது. ஊழியர் சம்பளங்கள், அரசிற்கான வரிகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை கருத்திற்கொண்டதன் பின்னரான கம்பனியின் பெறுமதி சேர்ப்பானது 2015 இல் எதிர்க்கணியப் பெறுமதி ரூபா 5,194,890 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் இது எதிர்க்கணியப் பெறுமதி ரூபா 1,028,434 ஆகவும் காணப்பட்டது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மற்றும் திரவத்தண்மை எல்லை

கம்பனியின் நடைமுறைச்சொத்து மற்றும் நடைமுறைப்பொறுப்பு என்பவற்றை பகுப்பாய்வு செய்யும் போது, தொழிற்படு மூலதனமானது 2015 தொடக்கம் தொடர்ச்சியாக எதிர்க்கணியமாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் எதிர்க்கணியப் பெறுமதி ரூபா 16,585,267 உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதியில் எதிர்க்கணியப் பெறுமதி ரூபா 22,868,875 ஆக காணப்பட்டது. இது கம்பனியின் தொழிற்படு மூலதன முகாமைத்துவமானது மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளமையை வெளிப்படுத்துகின்றது. அவ்வாறே 2016 இல் ரூபா 19,433,502 ஆக வெளிப்படுத்தப்பட்ட எதிர்க்கணியத் திரவத்தன்மை எல்லையானது மீளாய்வாண்டில் ரூபா 25,868,875 ஆக அல்லது 33 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு வினைதிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கம்பனியினால் எவ்வித வருமானமும் உருவாக்கம் செய்யப்பட்டிராத போதிலும், கம்பனியின் மூன்று ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கூலிகளாக திரண்ட தொகை ரூபா 5,355,534 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இவ்ஊழியர்கள் சார்பாக பயிற்சியளித்தல் செலவு ரூபா 115,300 உம் நேர்ந்திருந்தது.

(ஆ) கம்பனியின் நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களை அடையும் வகையில் எவ்வித செயற்பாடுகளையும் செயற்படுத்தியிருக்காமையினால், கம்பனி தனது செலவுகளின் நிதியிடலுக்காக தாய்க்கம்பனி மீது முழுமையாக தங்கியிருக்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக 2017 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 22,704,067 தொகையினை தாய்க்கம்பனிக்குச் செலுத்தவேண்டியிருந்தது.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாள்கையும

2003 ஜுன் 02 இன் பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடி/12 இன் பிரகாரம், கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன கம்பனியினால் அதன் தொடக்க காலத்திலிருந்தே தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.